UNIVERSITY OF CAMBRIDGE INTERNATIONAL EXAMINATIONS
General Certificate of Education Advanced Subsidiary Level

www.PapaCambridge.com

**TAMIL LANGUAGE** **8689/02**

Paper 2 Reading and Writing **October/November 2012**

**1 hour 45 minutes**

Additional Materials: Answer Booklet/Paper

**READ THESE INSTRUCTIONS FIRST**

If you have been given an Answer Booklet, follow the instructions on the front cover of the Booklet.
Write your Centre number, candidate number and name on all the work you hand in.
Write in dark blue or black pen.
Do not use staples, paper clips, highlighters, glue or correction fluid.

Answer **all** questions.
Write your answers in **Tamil** on the separate Answer Paper provided.
Dictionaries are **not** permitted.
You should keep to any word limits given in the questions.

At the end of the examination, fasten all your work securely together.
The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.

**முதலில் இந்த அறிவுறுத்தல்களைப் படியுங்கள்**

உங்களுக்கு தரப்பட்டிருக்கும் விடை எழுதும் புத்தகத்தில் முதல் பக்கத்தில் உள்ள
அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.
விடை எழுதும் புத்தகத்தைக் கொடுப்பதற்கு முன்னால் அதில் உங்கள் பெயர், உங்கள் எண்
உங்கள் தேர்வு நிலைய எண், ஆகியவற்றை எழுதுங்கள்.
கரு நீலம் அல்லது கருப்பு நிற பேனாக்களைப் பயன்படுத்துங்கள்.
ஸ்டேப்பிள்ஸ் பின்கள், பேப்பர் க்ளிப்புகள், பசை , திருத்தம் செய்யும் திரவம்,
ஹைலைட்டர்களைப் பயன்படுத்தாதீர்கள்.

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.
தரப்பட்டுள்ள விடைத் தாளில் **தமிழில்** விடைகளை எழுதுக.
அகராதிகள் அனுமதிக்கப்படமாட்டாது
விடை எழுதுகையில் சொற்களின் அளவு குறிப்பிடப் பட்டிருந்தால் அதற்குள் விடை
எழுதவேண்டும்.
விடைத்தாள்களை ஒன்றுடன் ஒன்று உறுதியாகக் கட்டுங்கள்.
ஒவ்வொரு வினா அல்லது வினாப்பகுதியின் இறுதியில் அதற்குரிய புள்ளிகள் அடைப்புக்
குறிக்குள் [ ] தரப்பட்டிருக்கும்.

This document consists of **5** printed pages and **3** blank pages.

DC (SLM) 63490
© UCLES 2012

UNIVERSITY *of* CAMBRIDGE
International Examinations

www.PapaCambridge.com

## பகுதி 1

முதலில் கீழே தரப்பட்டுள்ள பத்தியைப் படியுங்கள். பின்னர் வினாக்களுக்கு விடை அளியுங்கள்.

### மதமும் பொருளாதாரமும்

உலகில் மத அடிப்படையிலான சுற்றுலா வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. கடந்த 60 ஆண்டுகளில் போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தாலும் கூடுதல் ஓய்வு நேரம் கிடைப்பதாலும் நிறைய மக்கள் நீண்டதூர பயணங்களை குறைந்த செலவில் செய்ய முடிகிறது. இப்பொழுது அதிகமான பயணிகள் செல்லும் இடங்கள் வழிபாட்டுத் தலங்களாகவோ அற்புதங்களுக்குப் பெயர்பெற்ற இடங்களாகவோ இருக்கின்றன. இந்த வகை சுற்றுலாவை யாரும் குறைத்து எடைபோட முடியாது. ஏனென்றால் இதன் மூலம் பல துறைகளில் நிறைய வருவாய் கிடைக்கிறது. கட்டிடத் துறை போன்ற தொழில்களை வளர்க்கவும் வாய்ப்பு இருக்கிறது.

தமிழ்நாட்டில் மதுரையில் மீனாட்சி கோவில் என்ற ஒரு பெரிய கோவில் இருக்கிறது. தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அங்கே போகிறார்கள். கோவிலுக்கு அருகில் ஹோட்டல் வைத்திருக்கும் திரு. சோமசுந்தரத்துடன் பேச்சுக் கொடுத்தபோது அவர் சொன்னார், “ஐயா, இந்தக் கோவிலால் எத்தனை பேருக்கு பிழைப்பு நடக்கிறது என்று எண்ணிப்பார்த்தால் வியப்பாக இருக்கிறது. கோவில் ஊழியர்கள், தேங்காய், பூ, பழம் விற்போர், கோவிலுக்கு பயணிகளை அழைத்துவரும் வண்டிக்காரர்கள், கோவிலைச் சுற்றியுள்ள கடைகள், ஹோட்டல்கள் முதலிய அனைத்தும் இதை நம்பித்தான் இருக்கின்றன. யாத்ரீகர்கள் கொண்டு குவிக்கும் பணத்தால் எங்கள் ஆண்டு வருமானம் அதிகரித்திருக்கிறது. இதனால் உள்ளூர் வசதிகளும் பெருகியுள்ளன.”

பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பக்தர் திரு ராமசாமியும் அவர் சொல்லுவதை ஆமோதித்தார். “கோவில் மூலம் வருவாய் வருவது உண்மைதான். ஆனால் சில மாறுதல்கள் தேவை. சில நாட்களில் தாங்கமுடியாத கூட்டம் வந்து நெரிசல் ஏற்படுவதால் கூட்டத்தை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதே அளவு நெரிசல் நீடித்தால் கோவில் சிலைகளுக்குக் கூட சேதம் ஏற்படலாம். சிலருக்கு கசப்பான அனுபவம் கிடைக்கலாம். மக்கள் மன அமைதியை நாடி புனித இடங்களுக்கு வருகிறார்கள். கூட்டத்தில் வரும் பலர் சத்தம் போடுவதாலும் குப்பைகளைக் கீழே போடுவதாலும் புனிதத்துவத்துக்கு ஊறு ஏற்படும்” என்றார்.

தொலைதூர சுற்றுலா தலங்கள் பற்றி நிறைய டெலிவிசன் நிகழ்ச்சிகள் வந்ததோடு இப்போது நிறைய ஆன்மீகப் புத்தகங்களும் பத்திரிக்கைகளும் வரத்துவங்கிவிட்டன. பல இந்திய மொழிகளில் ஆன்மீக விஷயங்களை மட்டும் காட்டும் டெலிவிசன் நிலையங்களும் தோன்றியுள்ளன. இது தவிர பல நாடகங்களும் திரைப்படங்களும் மதம் மற்றும் புராணக் கதை அடிப்படையில் எடுக்கப்படுகின்றன. ஏராளமான சமய இணைய தளங்களும் உள்ளன. இதனால் பல மதங்களைப் பற்றிய தகவல் எளிதில் கிடைக்கிறது. சகிப்புத் தன்மையும் நல்லெண்ணமும் வளருகிறது. இதனால் ஊடகத் துறை மட்டுமின்றி கம்ப்யூட்டர் துறையிலும் கூட மதத்தின் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது. ஆனால் மதத்தை எதிர்ப்போர், “அதனால் என்ன, மதமே இல்லாவிட்டாலும்கூட வேறு இடங்களில் இதே போன்ற வேலைகள் கிடைக்குமே” என்கிறார்கள். ஆனால் இன்று உலகம் முழுவதும் புனிதத்தலங்கள், மடங்கள் ஏற்படுத்தியுள்ள செல்வாக்கைப் பார்க்கையில் மதத்தை நம்பி வாழ்வோரின் எண்ணிக்கை எவ்வளவு பெரிது என்பது உள்ளங் கை நெல்லிக் கனி போல விளங்கும்.

www.PapaCambridge.com

**1** கீழே கொடுத்துள்ள ஒவ்வொரு விளக்கத்திற்கும் மிகப் பொருத்தமான சொல் அ
சொற்றொடரை மேலேயுள்ள பத்தியிலிருந்து எடுத்து எழுதுக.

எடுத்துக்காட்டு: புகை வண்டி ஓடும் பாதை – தண்டவாளம்

**(a)** புகழ்பெற்ற [1]
**(b)** குறைத்து மதிப்பிட [1]
**(c)** நினைத்துப் பார்த்தால் [1]
**(d)** வருடம் [1]
**(e)** உரத்த குரலில் பேசுதல் [1]

[மொத்தம் 5 மதிப்பெண்கள்]

**2** கீழே தரப்பெற்றுள்ள சொல்லின் அல்லது சொற்றொடரின் பொருளும் தெளிவாகக்கூடிய வகையில் அவற்றை உங்கள் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

எடுத்துக்காட்டு: அன்பு

விடை – குழந்தைகளிடம் பெற்றோர் அதிகம் அன்பு காட்டுகிறார்கள்.

**(a)** வருவாய் [1]
**(b)** ஆயிரக்கணக்கான [1]
**(c)** தாங்கமுடியாத [1]
**(d)** தொலைதூர [1]
**(e)** இல்லாவிட்டாலும் [1]

[மொத்தம் 5 மதிப்பெண்கள்]

**3** பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து சொற்களையோ வாக்கியங்களையோ அப்படியே எடுத்தெழுதாது சொந்த வாக்கியங்களில் விடை தருக.

**(a)** **(i)** கடந்த அரை நூற்றாண்டில் சுற்றுலா வளர உதவிய அம்சங்கள் எவை? [2]

**(ii)** இதனால் என்ன நன்மை ஏற்படுகிறது? [1]

**(b)** உள்ளூர் மக்கள் பிழைப்புக்கும், வட்டார வளர்ச்சிக்கும் மதுரை மீனாட்சி கோவில் எந்த வகையில் உதவுகிறது? [3]

**(c)** சுற்றுலா பயணிகளால் ஏற்படும் பிரச்சினைகள் என்ன என்று ராமசாமி கருதுகிறார்? [4]

**(d)** ஊடகத்துறையின் பொருளாதார வளர்ச்சிக்கு மதம் எவ்வாறு உதவுகிறது? [3]

**(e)** மதம் தொடர்பான இணைய தளங்களின் பங்கு பணி என்ன? [2]

[விடைகளுக்கு – 15 மதிப்பெண்கள், சிறந்த மொழித் திறன் – 5 மதிப்பெண்கள், மொத்தம் 20 மதிப்பெண்கள்]

www.PapaCambridge.com

## பகுதி 2

### புனிதப் பயணம்

மக்கள் பல வழிகளில் கடவுள் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்கள். சிலர் மலை அடிவாரம் அல்லது மலை உச்சிக்குக்குச் சென்றோ குகைகளுக்குச் சென்றோ அமைதி, மௌனம் மூலமாக கடவுளைச் சிந்திக்கின்றனர். இன்னும் சிலர் கடுமையான விரதம் கடைப் பிடித்தோ, உடலில் வேல் முதலிய சின்னங்களைக் குத்திக்கொண்டோ, கடும் வெய்யிலில் காவடி முதலிய பாரங்களை சுமந்து சென்றோ இறைவனை நினைக்கின்றனர். ஏராளமானோர் நீண்ட தொலைவு நடந்து சென்றே இவைகளைச் செய்கின்றனர்.

இந்துக்கள் காசி முதலிய புனிதத்தலங்களுக்கும், முஸ்லீம்கள் ஆண்டுதோறும் மெக்காவுக்கும் யாத்திரை செல்கிறார்கள். கிறிஸ்தவர்களும் லூர்துஸ் (பிரான்ஸ்) போன்ற இடங்களுக்குச் செல்கிறார்கள். இவ்வாறு மில்லியன் கணக்கில் யாத்திரை போக இவர்களை ஊக்குவிக்கும் சக்தி எது? இதில் சிலர் சுற்றுலா நோக்கோடு செல்லக்கூடும். ஆனால் பெரும்பாலோர் இறை அனுபவத்துக்காகவே செல்கின்றனர். தங்கள் பாவங்களைக் கழுவவும் நேர்த்திக் கடன்களைச் செலுத்தவும் யாத்திரை போகிறார்கள் .பல யாத்ரீகர்களைப் பேட்டி கண்டபோது, அவர்கள் இதனால் ஏற்படும் பலன்களை எடுத்துச் சொன்னார்கள். கிறிஸ்தவ புனிதத்தலத்துக்கு சென்ற ஒருவர் கூறுகிறார் “யாத்திரை என்பது நடமாடும் தியானப் பயிற்சி போன்றது. நீல வானமே கோவில். வெள்ளை மேகங்களே வழிபடும் இடம். படிப்படியாக நாம் இறைவனை நோக்கி செல்கிறோம்.யாத்திரை மிகவும் கடினமானதுதான். ஆனால் அதிக பலன்களைத் தருகிறது”.

ஹஜ் யாத்திரை சென்ற ஒரு முஸ்லிம் “வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத அளவு அற்புதமானது இந்த யாத்திரை. மற்றவர்களின் ஆனந்தக் கண்ணீரைக்கண்டு நாமும் ஆனந்தக் கண்ணீர் விடுகிறோம். மிகவும் கட்டுப்பாடுகளோடு வாழவும், முக்கியமாக நம் தேவைகளை ஏனையோருக்கு விட்டுக் கொடுக்கவும் கற்றுக்கொள்கிறோம்” என்கிறார்.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டும்நடக்கும் கும்பமேளாவுக்குச் சென்ற ஒரு வெளிநாட்டு யாத்ரீகர் “இது போல எங்கனும் கண்டதில்லை.இதை நேரில் பார்த்தால்தான் நம்புவார்கள். ஒவ்வொரு நாளும் ஒரு அனுபவம் கிடைத்தது. இதில் மிகவும் முக்கியமானது கடவுள் மீதான நம்பிக்கை அதிகரிப்பதாகும்” என்று சொல்கிறார்.

யாத்திரை செல்வோர் போகும் வழியில் எவ்வளவோ இடர்களைச் சந்திக்கின்றனர். பணச் செலவும் ஏற்படுகிறது. எல்லா யாத்திரைகளிலும் நீண்ட தொலைவு நடக்கவேண்டும். இதனால் உடல் நலம் பெருகும். யாத்திரை, விரதங்கள் மூலம் வேறு சில அனுபவங்களும் கிடைக்கும். மிகச் சிக்கனமான அளவு உடை,உணவு, உறைவிடம் ஆகியவற்றுடன் பயணம் செய்கையில் ஒரு சிறிதும் வசதிகள் இல்லாத ஏழை மக்களின் நிலைமை நமக்கு நன்கு தெளிவாகிறது. இது மேலும் அறப்பணிகள் செய்ய நம்மை ஊக்குவிக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் அனுபவங்களை விலை கொடுத்து வாங்குவதே புனித யாத்திரை.

www.PapaCambridge.com

4 பின்வரும் வினாக்களுக்கு தமிழில் விடை தருக. பத்தியிலிருந்து சொற்களையோ வாக்கியங்களையோ அப்படியே எடுத்தெழுதாது சொந்த வாக்கியங்களில் விடை தருக.

(a) தங்கள் நம்பிக்கைகளை வெளிப்படுத்த மக்கள் என்ன செய்கிறார்கள்?

(b) மக்கள் ஏன் யாத்திரை போகிறார்கள்? [2]

(c) யாத்திரையின் பலன்கள் பற்றி கிறிஸ்தவ யாத்ரீகர் கூறுவது என்ன? [2]

(d) ஹஜ் யாத்திரை சென்றவர் யாத்திரையினால் ஏற்படும் நன்மைகள் பற்றி என்ன கூறுகிறார்? [2]

(e) கும்பமேளாவுக்கு சென்றவருக்கு என்ன அனுபவம் கிடைத்தது? [2]

(f) யாத்திரை மூலம் கிடைக்கும் வேறு அனுபங்கள் பற்றி கடைசி பத்தியில் என்ன கூறப்பட்டுள்ளது? [3]

[விடைகளுக்கு – 15 மதிப்பெண்கள், சிறந்த மொழித் திறன் – 5 மதிப்பெண்கள், மொத்தம் 20 மதிப்பெண்கள்]

5 பின்வரும் வினாக்களுக்கு 140 சொற்களுக்கு மேற்படாமல் தமிழில் விடை தருக.

(a) மதத்தின் செல்வாக்கு எந்த அளவுக்கு பரவியுள்ளது என்பதை இரண்டு பகுதிகளில் இருந்தும் தொகுத்து எழுதவும். [10]

(b) புனித யாத்திரை மூலம் உங்களுக்கோ உங்கள் ஊருக்கோ நன்மை கிடைத்ததா? இல்லையா? எடுத்துக்காட்டுகளோடு விடை தருக. [5]

[விடைகளுக்கு – 15 மதிப்பெண்கள், சிறந்த மொழித் திறன் – 5 மதிப்பெண்கள், மொத்தம் 20 மதிப்பெண்கள்]

**BLANK PAGE**

www.PapaCambridge.com

**BLANK PAGE**

www.PapaCambridge.com

**BLANK PAGE**

www.PapaCambridge.com

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

University of Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of